Australian Government

COVID-19 VACCINATION

# உங்களுடைய ‘கோமிர் நாட்டி’ (ப்ஃபைசர்) ‘கோவிட்-19’ தடுப்பூசி மருந்தை நீங்கள் இட்டுக்கொண்ட பிறகு

கடைசியாகப் புதுப்பிக்கப்பட்டது: 18 ஆகஸ்ட்டு 2021

## இந்தத் தடுப்பூசி மருந்தைப் பற்றி

இன்று நீங்கள் ‘**கோமிர்நாட்டி**’ (**ப்ஃபைஸர் ஆஸ்திரேலியா லிமிடெட்**) **தடுப்பூசி மருந்தினை** இட்டுக்கொண்டிருக்கிறீர்கள்.

‘கோவிட்-19’-இன் காரணமாக நோய்வாய்ப்படும் ஆபத்திலிருந்து மக்களை இந்தத் தடுப்பூசி மருந்தினால் தடுக்க இயலும். ‘ப்ஃபைசர் கோவிட்-19 தடுப்பூசி’ மருந்தில் உயிரோடு இருக்கும் வைரஸ் எதுவும் இல்லை, மற்றும் இதனால் உங்களுக்குக் ‘கோவிட்-19-ஐ ஏற்படுத்த இயலாது. ‘ஸ்பைக் புரதம்’ (spike protein) எனப்படும் ‘சார்ஸ்-கோவ்-2’ வைரஸ் (SARS-CoV-2)-இன் ஒரு முக்கிய அங்கத்திற்கான ‘மரபணுக் குறியீ’(genetic code)ட்டினை இது கொண்டுள்ளது. இந்தத் தடுப்பூசி மருந்தினை நீங்கள் இட்டுக்கொண்ட பிறகு, இந்த ‘ஸ்பைக் புரத’த்தின் பிரதிகளை உங்களுடைய சரீரம் உருவாக்கும். இதற்குப் பிறகு ‘ஸார்ஸ்-கோவ்-2 வைரஸ்-2’-ஐ அடையாளம் கண்டு அதனோடு போரிட உங்களுடைய நோயெதிர்ப்பு முறைமை கற்றுக்கொள்ளும். இந்த மரபணுக் குறியீட்டினை சரீரம் விரைவில் நொறுக்கிவிடும்.

## தடுப்பூசி மருந்தினை இட்டுக்கொண்ட பிறகு நீங்கள் எதிர்பார்க்க வேண்டியது

எவ்வொரு தடுப்பூசி மருந்திற்கும் இருப்பதைப் போல, 'ப்ஃபைசர்'-ஐ நீங்கள் இட்டுக்கொண்ட பிறகு, உங்களுக்கு சில பக்க விளைவுகள் ஏற்படக்கூடும்.

**'ப்ஃபைசர்'** தடுப்பூசி மருந்தினை இட்டுக்கொண்ட பிறகு ஏற்படவல்ல **பொதுவான** பக்க விளைவுகளில் பின்வருவன உள்ளடங்கும்:

- ஊசி போடப்பட்ட இடத்தில் வலி அல்லது வீக்கம்
- களைப்பு
- தலைவலி
- தசை வலி
- சுரம் மற்றும் குளிர்கள்
- மூட்டு வலி.

**'ப்ஃபைசர்'** தடுப்பூசி மருந்தினை இட்டுக்கொண்ட பிறகு **குறைவாக ஏற்படக்கூடிய** பக்க விளைவுகளில் உள்ளடங்குவன:

- ஊசி போடப்பட்ட இடம் சிவந்துவிடல்
- குமட்டல்
- பருத்துவிட்ட 'நிணநீர்ச் சுரப்பி'(lymph node)கள்
- சுகவீன உணர்வு
- கை-கால் வலி
- தூக்கமின்மை
- ஊசி போடப்பட்ட இடத்தில் அரிப்பு.

இந்த பக்க விளைவுகள் பொதுவாக மிதமானவையாய் இருக்கும், மற்றும் பொதுவாக ஒன்று அல்லது இரண்டு நாட்களுக்குள் மறைந்துவிடும். மற்ற பொதுவான தடுப்பூசி மருந்துகளோடு ஒப்பிடும்போது, இந்தத் தடுப்பூசி மருந்தினை இட்டுக்கொண்டவர்களுக்கு இதன் காரணமாக 'ஃப்ளூ' சுரத்தைப் போன்ற அதி கணிசமான பக்க விளைவுகள் ஏற்படக்கூடும், மற்றும் அவர்களுடைய வழமையான அலுவல்களிலிருந்து ஒதுங்கியிருக்க வேண்டிய காலம் அவர்களுக்கு இருக்கக்கூடும். இந்த அறிகுறிகள் முதல் அல்லது இரண்டாவது மருந்தளவை இட்டுக்கொண்ட பிறகு ஏற்படலாம், ஆனால் இரண்டாவது மருந்தளவிற்குப் பிறகு இவை அதி பொதுவானவை.

தடுப்பூசி மருந்தினை இட்டுக்கொண்ட பிறகு உங்களுக்கு ஊசி போடப்பட்ட இடத்தில் வலி அல்லது சுரம், தலைவலிகள் அல்லது உடல் வலிகள் ஏற்பட்டால் நீங்கள் 'பாரஸிடமோல்' அல்லது 'இபுப்ரோஃபென்' எடுத்துக்கொள்ளலாம். மேலே சொல்லப்பட்டுள்ள அறிகுறிகளில் சிலவற்றைக் குறைக்க இவை உதவும் (தடுப்பூசி மருந்தினை இட்டுக்கொள்வதற்கு முன்பாக 'பாரஸிடமோல்' அல்லது 'இபுப்ரோஃபென்' எடுத்துக்கொள்ள வேண்டிய தேவை இல்லை). ஊசி போடப்பட்ட இடத்தில் வீக்கம் இருந்தால் 'குளிர்-அழுத்துத் திண்டு' (cold compress) ஒன்றை நீங்கள் பயன்படுத்தலாம்.

**'ப்ஃபைசர்'** தடுப்பூசி மருந்தினை இட்டுக்கொண்ட பிறகு **அரிதாக** ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ள பக்க விளைவுகளாவன:

- கடும் ஒவ்வாமை எதிர்ச்செயல் ('ஆனஃபிலாக்ஸிஸ்' (anaphylaxis)
- 'மையோகார்டைட்டிஸ்' (இதயத் தசை அழற்சி) (myocarditis), மற்றும் 'பெரிகார்டைட்டிஸ்' (இதயத்தின் வெளிப்புறத்தைச் சுற்றியுள்ள சவ்வில் ஏற்படும் அழற்சி) (pericarditis). இவற்றால் பாதிக்கப்பட்டவர்கள் இன்னும் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டுவருகின்றனர் என்றாலும், இவை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ள தருணங்கள் மிதமானவையாகவும், விரைவில் குணமடைபவையாகவும்

இருந்துள்ளன,. பெரும்பான்மையான தருணங்கள் இந்தத் தடுப்பூசியின் இரண்டாவது அளவினை இட்டுக்கொண்ட பிறகும், பெரும்பான்மையாக இள வயது ஆண்களில் (30 வயதிற்குக் கீழ்ப்பட்டவர்கள்) ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளன

தடுப்பூசி மருந்தினை இட்டுக்கொண்ட பிறகு, பின் வரும் தருணங்கள் உங்களுக்கு ஏற்பட்டால் நீங்கள் மருத்துவ கவனிப்பினை நாட வேண்டும்:

- ஒவ்வாமை எதிர்ச்செயல் ஒன்று உங்களுக்கு ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது என நீங்கள் நினைத்தால். சுவாசிப்பதில் சிரமம், இரைக்கும் சுவாசம், அதிவேக இதயத் துடிப்பு அல்லது மயங்கி விழல் போன்ற பாரதூரமான அறிகுறிகள் ஏற்பட்டால் 'மூன்று பூஜ்ய'(000)த்தினை அழையுங்கள்
- நெஞ்சு வலி, நெஞ்சில் அழுத்தம் அல்லது அசௌகரியம், ஒழுங்கற்ற இதயத் துடிப்பு, தவறும் இதயத் துடிப்புகள் அல்லது 'படபடப்பு', மயக்கம், மூச்சுத் திணறல் அல்லது சுவாசிக்கும்போது வலி ஆகியன இருந்தால்
- பக்க விளைவு ஏதும் ஏற்படக்கூடும் என நீங்கள் கவலைப்பட்டால், அல்லது புதிய அல்லது எதிர்பாராத அறிகுறிகள் உங்களுக்கு ஏற்பட்டால்
- இந்தத் தடுப்பூசி மருந்தினால் ஒரு சில நாட்களுக்குப் பிறகும், மறையாத எதிர்பாரா பக்க விளைவு ஒன்று உங்களுக்கு ஏற்பட்டிருந்தால்.

அவசரம் அல்லாத அறிகுறிகளுக்கு, உங்களுடைய வழமையான சுகாதாரப் பராமரிப்பு வழங்குநரை நீங்கள் பார்க்கலாம் (உதாரணமாக, உங்களுடைய பொது மருத்துவர் (G.P)).

## தடுப்பூசி மருந்தின் பாதுகாப்பு குறித்த கண்காணிப்பு மற்றும் பக்க விளைவுகளைப் பற்றிய அறிவிப்பு

சந்தேகிக்கப்படும் பக்க விளைவுகளை நீங்கள் உங்களுடைய தடுப்பூசி மருந்து வழங்குநருக்கு அல்லது மற்ற சுகாதாரப் பராமரிப்புத் தொழிலருக்குத் தெரியப்படுத்தலாம். அதையடுத்து அவர்கள் உங்கள் சார்பாக உங்களுடைய மாநில அல்லது எல்லைப்பகுதியின் சுகாதாரத் திணைக்களத்திற்கு அல்லது நேரடியாக 'மருத்துவ சிகிச்சைச் சரக்குகள் நிர்வாகம்' (Therapeutic Goods Administration (TGA)) எனும் அமைப்பிற்கு சம்பிரதாயப்படியான அறிக்கை ஒன்றை ஏற்படுத்துவார்கள்.

இதை நீங்களாகவே அறிவிக்க வேண்டுமெனெ நீங்கள் விரும்பினால், TGA-யினரது வலைத்தலத்திலுள்ள reporting suspected side effects associated with a COVID-19 vaccine webpage எனும் பக்கத்திற்குச் சென்று அங்கு தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றுங்கள்.

## தடுப்பூசி மருந்தினை இட்டுக்கொண்ட பிறகான 'கோவிட்-19'

'கோவிட்-19' தடுப்பூசி மருந்தினை இட்டுக்கொண்டதனால் ஏற்படும் சில பக்க விளைவுகள் 'கோவிட்-19' நோய்க்கான அறிகுறிகளைப் போலவே இருக்கக்கூடும் (உதாரணமாக, சுரம்). இருந்தாலும், 'ஃபைசர்' தடுப்பூசி மருந்தில் உயிரோடுள்ள 'ஸார்ஸ்-கோவ்-2' (SARS-CoV-2) வைரஸ் எதுவும் இல்லை மற்றும் இதனால் உங்களுக்குக் 'கோவிட்-19'-ஐ ஏற்படுத்த இயலாது. பின் வரும் தருணங்கள் உங்களுக்கு ஏற்பட்டால், 'கோவிட்-19' நோயறிவுச் சோதனையை மேற்கொள்ளவேண்டிய, அல்லது உங்களைத் தனிமைப்படுத்திக்கொள்ள வேண்டிய தேவை உங்களுக்கு இல்லாமல் இருக்கலாம்:

- தடுப்பூசி மருந்தினை நீங்கள் இட்டுக்கொண்ட பிறகு வரும் முதல் இரண்டு நாட்களில் சுரம், தலைவலி அல்லது அசதி போன்ற பொதுவான அறிகுறிகள் உங்களுக்கு ஏற்பட்டால், மற்றும்
- சுவாச நோய் அறிகுறிகள் ஏதும் உங்களுக்கு இல்லை என்று உங்களுக்கு உறுதியாகத் தெரிந்தால் (உதாரணமாக, நாசிக் கசிவு, இருமல், தொண்டை வலி, வாசனைத் திறன் இழப்பு அல்லது சுவைத் திறன் இழப்பு).

இருந்தாலும், நடப்பு-நாள் வரைக்குமான மிகச் சமீபத்திய தகவல்களைத் தெரிந்துகொள்ள நீங்கள் உங்களுடைய மாநில/எல்லைப்பகுதியின் தற்சமயம் நடப்பிலுள்ள வழிகாட்டல்களைப் பார்க்க வேண்டும். நீங்கள் வசிக்கும் பகுதியில் 'கோவிட்-19'-இன் திடீர்ப்-பரவல் ஒன்று ஏற்படும் தருணத்தில் இந்த அறிவுரைகள் மாறக்கூடும். மற்ற தேவைப்பாடுகள் உங்களுக்குப் பொருந்துமானால், இப்போதும் நீங்கள் 'கோவிட்-19' நோயறிவுச் சோதனை ஒன்றை மேற்கொள்ள வேண்டியிருக்கலாம், உதாரணத்திற்கு, 'கோவிட்-19' தொற்று இருப்பதாகத் தெரியவந்துள்ள ஒருவரோடு நீங்கள் நெருங்கிய தொடர்பில் இருந்திருப்பவர் என்றால். உங்களுக்கு சந்தேகமாக இருந்தால், மருத்துவ மதிப்பீடு ஒன்றை நாடுங்கள்.

## உங்களுடைய இரண்டாவது சந்திப்புவேளையை மறக்காமல் நினைவில் வைத்திருங்கள்

'ஃபைசர் கோவிட்-19 தடுப்பூசி'-யின் இரண்டு மருந்தளவுகளை நீங்கள் இட்டுக்கொள்ள வேண்டியது முக்கியம். இந்த மருந்தளவுகள் பொதுவாக 3-6 வார கால இடைவெளியில் கொடுக்கப்படும், ஆனால், விசேடமான சூழல்களில் இதை விட இன்னும் நீண்ட கால இடைவெளி சிபாரிசு செய்யப்படலாம். 'கோவிட்-19'-இற்கு எதிரான பாதுகாப்பை இரண்டாவது மருந்தளவு நீட்டிப்பதற்கான சாத்தியம் இருக்கிறது.

## உங்களுடைய சந்திப்புவேளையின்போது நீங்கள் கொடுக்கும் தகவல்கள் பயன்படுத்தப்படும் விதம்

உங்களைப் பற்றிய தனிப்பட்ட விபரங்கள் எப்படி சேகரிக்கப்படும், இருப்பில் வைக்கப்படும் மற்றும் பயன்படுத்தப்படும் என்பதைப் பற்றிய தகவல்களுக்கு https://www.health.gov.au/using-our-websites/privacy/privacy-notice-for-covid-19-vaccinations எனும் வலைத்தலப் பக்கத்திற்குச் செல்லுங்கள்.